2024

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014
## தமிழ்மொழியும் இலக்கியமும் - I

| தரம்:- 11 | சுட்டெண்:- | நேரம்:- 1 மணித்தியாலம் |
|---|---|---|

சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடி இடுக.

❖ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. "நிரந்தெழுந்து **வேயின்** திரண்ட தோள்" - இங்கு வேய் என்பதன் பொருள்
   1. கல் 2. வேல் 3. மூங்கில் 4. வலிமை

2. "கொண்டானின் துன்னிய **கேளிர்** பிறரில்லை" - இங்கு கேளிர் என்பதன் பொருள்
   1. உறவினர் 2. நண்பர் 3. பகைவர் 4. கணவன்

3. "**ஆழி**வாய்ச் சத்தம் அடங்காதோ" - இங்கு ஆழி என்பதன் பொருள்
   1. சக்கரம் 2. கடல் 3. காற்று 4. அகழி

4. **சீதளக்** காற்று மேனியை தழுவிச் சென்றது - இங்கு சீதளம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. குளிர் 2. தென்றல் 3. தண்மை 4. வெப்பம்

5. எந்தவொரு கலைப்படைப்பையும் **காய்தல்** இன்றி நோக்கல் வேண்டும் - இங்கு காய்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. தேய்தல் 2. உவத்தல் 3. வெறுத்தல் 4. கண்டித்தல்

❖ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க

6. உலகமும், உலகவின்பங்களும் மாத்திரமே மெய்யென்றும் கடவுளோ மறுமையோ இல்லை யென்றும் வாதிப்பவன்
   1. நாத்திகன் 2. ஆத்திகன் 3. உலோகாயுதன் 4. துறவி

7. இளமைப் பொருள் குறிக்கும் கன்று என்ற சொல்லை பயன்படுத்தும் வழக்கம் அற்ற சொல்
   1. மான் 2. கமுகு 3. புகையிலை 4. எலுமிச்சை

8. தகவல் தொழில் நுட்பத்துறை சார்ந்த "digital" என்ற சொல்லுக்கு நிகராக தமிழில் வழங்கும் கலைச் சொல்
   1. எண்மானம் 2. பெறுமதி 3. தொகைமதிப்பு 4. காலநிலை

9. பனையின் இளங்காய் நுங்கு என்பது போல, பலாவின் இளங்காய்
   1. வடு 2. கச்சல் 3. குரும்பை 4. மூசு

10. சிங்கம், வண்டு, திருமால் எனப் பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்
    1. மால் 2. அரி 3. மது 4. பதி

11. 'தவிசாளர்' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது
    1. காரியதரிசி 2. கணக்காளர் 3. பொருளாளர் 4. அவைத்தலைவர்

12. பின்வருவற்றுள் ஒல்லாந்த மொழிச் சொல்
    1. சாக்கு 2. கடுதாசி 3. முலாம் 4. வசூல்

13. காலையும் மாலையும் சோலைக்குச் சென்றாள். இதில் வந்துள்ள சொல்லணி
    1. மோனை 2. சிலேடை 3. பின்வருநிலை 4. எதுகை

14. எதிர்ப் பொருள் குறித்த இரு சொற்கள் இணைந்து அமையாத இணை மொழி
    1. இன்பதுன்பம் 2. துணிமணி 3. ஏற்ற இறக்கம் 4. உயர்வுதாழ்வு



kalvi.lk

15. துன்பத்திற்கு மேல் துன்பம் தொடர்ந்து வருதல் என்பதை விளக்க பொருத்தமான உவமைத் தொடர்
1. வேலியே பயிரை மேய்ந்தாற் போல
2. சிறகிழந்த பறவை போல
3. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல
4. தோன்றி மறையும் வானவில்லைப் போல

16. அறிவில்லாதார் தம் வாய்ச்சொற்களினாலேயே தமக்கு தீங்கினைத் தேடிக் கொள்வர் என்ற பொருள் தரும் பழமொழி
1. யதார்த்தவாதி வெகுசனவிரோதி.
2. கெடு குடி சொற்கேளாது.
3. ஊர்வாயை மூட உலைமூடி தேவையில்லை.
4. நுணலும் தன் வாயால் கெடும்.

17. இளங்கன்று பயமறியாது என்ற பழமொழி உணர்த்தும் பொருள்
1. திருப்தியற்ற மனம்.
2. ஆராய்ந்து செய்.
2. கன்றுக்குட்டி பயம் கொள்ளாது.
4. வாலிபத் துணிவு.

18. அவன் பிச்சைக்காரனைக் கண்டு ஏளனம் செய்தான். இங்கு ஏளனம் செய்தல் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்
1. பல்லிளித்தல் 2. வாய்விடுதல் 3. முகமாதல் 4. வால்காட்டுதல்

19. எதனையும் முறையின்றி ஒழுங்கின்றிச் செய்தல் என்னும் பொருளை புலப்படுத்தும் மரபுத்தொடர்
1. குத்துக்கரணம் 2. தப்புத்தாளம் 3. பொய்புரட்டு 4. கோணல்மாணல்

20. கூட்டுப் பெயர் அல்லாதது
1. கட்டுரை 2. வெளியீட்டுத்திணைக்களம் 3. கண்காட்சி 4. அலைச்சல்

21. ஆதவன் மகன் என்பது
1. வினைத்தொகை 2. பண்புத்தொகை 3. வேற்றுமைத்தொகை 4. உம்மைத்தொகை

22. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணமாக அமைவது
1. கடற்கரை 2. மனவேதனை 3. மாடுகள் 4. நிலாமுகம்

23. நேற்று வந்தவை இந்தக் கடிதங்கள்தான். இங்கு வந்தவை என்பது
1. தொழிற் பெயர்
2. தெரிநிலை வினைமுற்று
3. குறிப்பு வினைமுற்று
4. வினையாலணையும் பெயர்

24. “உ” என்ற எழுத்து வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1. உமி 2. இருமல் 3. முள் 4. துடை

25. உங்கள் குறைகளை ஆசிரியரிடம் கூறுக. இவ்வியங்கோள் வினையின் பொருள்
1. வேண்டல் 2. வாழ்த்தல் 3. வைதல் 4. இரங்கல்

26. பின்வருவனவற்றுள் உயர்திணையின் ஒரு பாலுக்கே உரிய பெயர்
1. விருந்தாளி 2. மூதாட்டி 3. பிரதிவாதி 4. கூத்தாடி

27. பொருட்டு, நிமித்தம், ஆக ஆகிய சொல்லுருபுகள் பயன்படுத்தப்படும் வேற்றுமை
1. இரண்டாம் வேற்றுமை 2. மூன்றாம் வேற்றுமை 3. நான்காம் வேற்றுமை 4. ஆறாம் வேற்றுமை

28. சிறிய முயல் அந்த புதருக்குள் பாய்ந்து ஒழிந்தது - இதில் வினையெச்சமாக அமைந்த சொல்
1. .சிறிய 2. அந்த 3. புதருக்குள் 4. பாய்ந்து

29. மாதுளங்காய் என்பதனைப் பிரித்து எழுதினால்
1. மாதுளை + காய் 2. மாதுளம் + காய் 3. மாதுள + அங்காய் 4 மாது+ளங்காய்

30. பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கி நிற்கும் வாக்கியம்
1. லுணுகலையில் பெரும் மழை பெய்தது
2. துள்ளி ஓடிய மானைக் கண்டேன்
3. நீ முதலில் ஓடு
4. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது



kalvi.lk

❖ பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தை தெரிவு செய்க

31. இலங்கைத்தீவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் அதிகமானோர் இறந்தனர். ஐயோ! என்ன கொடுமை இறந்தவர்களைக் கண்டதும் கண்கள் தம்மை அறியாமலேயே வெள்ளம் போல நீர் வடித்தன
1. இலங்கையில் அதிகமானோர் இறந்தனர்.
2. கண்கள் கலங்குமாறு அனைவரும் இறந்தது கொடுமை.
3. இலங்கையில் பூமி அதிர்ச்சியில் அநேகர் இறந்தனர்.
4. இலங்கை பூமி அதிர்ச்சியில் இறந்தவரைப் பார்க்க கவலையாக இருந்தது.

32. கலைக்கும் கேளிக்கைக்கும் வேறுபாடு உண்டு. புலன்களின் வாயிலாக உள்ளதை உயர்த்துவது கலை. புலன்களுக்கு விருந்தூட்டி மயக்குவது கேளிக்கை. இவ்வாறு தெளிவு பெறுவதற்கு கல்வி துணை புரிய வேண்டும்.
1. கலைக்கும் கேளிக்கைக்கும் வேறுபாடு உண்டு.
2. கலையும் கேளிக்கையும் நெருங்கிய தொடர்பு உடையன.
3. கலை, கேளிக்கை ஆகியவற்றின் வேறு பாட்டினை அறிய கல்வி உதவவேண்டும்.
4. கலையை உணர கல்வி அவசியம்.

❖ வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க

33. நாட்டார் பாடல்களில் இடம் பெறும் உவமை உருவகங்கள் வாழ்க்கையோடு
1. தொடர்புள்ளதாக காணப்படுகின்றன.
2. தொடர்புள்ளதாக காணப்படுகின்றது.
3. தொடர்புள்ளனவாகக் காணப்படுகின்றது.
4. தொடர்புள்ளவையாகக் காணப்படுகின்றன.

34. மரக்குற்றியோ மனிதனோ அங்கே
1. தோன்றுகின்ற உரு 2. தோன்றுபவர் 3. தோன்றுபவள் 4. தோன்றுவது

35. எழுத்துப் பிழைகளற்ற சொல்வரிசை
1. உடமை, கயமை, தகமை, பகைமை
2. முகூர்த்தம், நாகரிகம், உற்சவம், நிச்சயம்
3. தேர்ச்சி, தளர்சி, ஆராட்சி, இகழ்ச்சி
4. சூள்ச்சி, வரற்சி, மாட்சி, ஆட்சி

36. பின்வருவனவற்றுள் சரியாகக் குறியீடுகள் இடப்பட்ட வாக்கியம்
1. "நீயுமா புரூட்டஸ்" என சீசர் வினாவினார்?
2. "நீயுமா? புரூட்டஸ்" என சீசர் வினாவினார்?
3. "நீயுமா புரூட்டஸ்"? என சீசர் வினாவினார்
4. "நீயுமா புரூட்டஸ்?" என சீசர் வினாவினார்

❖ புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

37. தனியார் நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதைத் தடுப்பதற்காக ஆணைக்குழு செய்த ................................................ ஏற்றுக்கொள்ளப்பட்டது.
1. விதப்புரை 2. ஆய்வுரை 3. மதிப்புரை 4. உறுதியுரை

38. நிதியாண்டிலே தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாதெனக் காரணங்காட்டி ஆண்டின் நடுப்பகுதியில் ........................................பிரேரணையை அமைச்சர் சமர்ப்பித்தார்.
1. துண்டுவிழும் 2. குறைநிரப்பு 3. மிகைச்செலவு 4. மிகையூதிய

39. தேர்தல் தெரிவில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக எதிர்க்கட்சியினரால் உச்ச நீதிமன்றத்திற்கு ........................................ செய்யப்பட்டது.
1. மனுத்தாக்கல் 2. பிடிவிறாந்து 3. முறைப்பாடு 4. கருத்துப்பரிமாற்றம்

❖ கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. அ) பழமொழிகளை யார் எப்பொழுது இயற்றினர் என்று சொல்ல முடியாது.
ஆ) அவை அவ்வவ்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்து விட்டு மறைந்து போகின்றன.
இ) அத்தகைய வாக்கியங்களே பழமொழிகள்
ஈ) நாம் நாள் தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வவ்போது எம்மால் அமைக்கப்படுவன.
உ) எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கவையாகப் பிறந்து மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன.
1. ஈ, ஆ, உ, இ, அ 2. ஆ, உ, இ, அ, ஈ 3. இ, ஈ, அ, உ, ஆ 4. அ, ஆ, உ, ஈ, இ

(1 x 40 = 40 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

2023

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II

| தரம்:- 11 | சுட்டெண்:- | நேரம்:- 2 மணித்தியாலம் |
|---|---|---|

➢ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

✳ சுருக்கமான விடை தருக.

1)

1. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
   தெண்டிரை யெறினி காட்டத் தேம்பிழி
   மகரயாழின் வண்டுக ளினிது பாட
2. எழுதியகவிதை, பறக்கும் தட்டு இவ் இரு தொடர்களிலும் உள்ள பெயரெச்ச விகுதிகள் எவை?
3. அறிக்கை ஒன்றினை எழுதும் போது பின்பற்றும் வழிமுறைகள் எவையேனும் இரண்டு தருக.
4. பின்வரும் இலக்கணப் போலிகளை இலக்கணமுடையதாக மாற்றி எழுதுக
   முன்றில், வாயில், புறநகர்
5. "கோதை தாழ் குழலினாளைக் கொண்டு போய் மறைய நின்றாள்" என்பதில் இடம் பெறும் வினைத் தொகை யாது?
6. "பூ எலாம் துய்ய வாசம்
   புன மெலாம் முனிவாசம்"
   வாசம் என்ற சொல் குறிக்கும் இருவேறு பொருள்கள் யாவை?
7. கண்ணா உனக்கு அடித்தவர் யார் ஏன் அழுகிறாய் எனத் தந்தை வினாவினார் இவ்வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தக்குறியீடுகளை இட்டு எழுதுக.
8. "உடைத்து விட்ட முட்டையதன் ஓடிவரும் மஞ்சள் உருண்டையடி உன்கன்னம் ஒப்பேதும் இல்லை" இதில் இடம் பெற்றுள்ள அணியை விளக்குக.
9. வணிக நிறுவனங்கள் நுகர்வோரைக் கவரும் வகையில் விளம்பரங்களை மேற்கொள்கின்றன. அவ்வாறு நேர்த்தியான வகையில் விளம்பரங்களை மேற் கொள்வதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. கட்டுரை எழுதும் போது பின்வருவனவற்றுள் எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுக.
    சிறந்த பயன்தருதல், சந்தேகம் ஏற்படக்கூறல், பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தல், முரண்படக்கூறல், வாசிப்பதற்கு இன்பம் தருதல். (2×10= 20 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.

அ) வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்கும். இதனால் தான் நூலகங்கள் உதயமாகின்றன. வாசிக்கும்மனிதர்கள் நூலகங்கள் நோக்கி விரைகின்றனர். அறிவை விரிவாக்கவும், அறிந்தவற்றை அறியாதவர்க்கு எடுத்துச் சொல்லவும் சொல்வதற்கான தகவல்களைச் சேகரிப்பதற்கும் நூலகங்கள் பயன்படுகின்றன. அறிவின் பல்துறையைச் சேர்ந்தவர்களும் வாசித்து தகவல் சேரிப்பதற்குமாக இந்த நூலகங்கள் வழி செய்கின்றன. இவற்றை கருத்திற்கொண்டு வாசிப்புத்திறனும் நூலகப் பயன்பாடும் எனும் தலைப்பில் மாணவ மன்றில் நீர் நிகழ்த்தும் மேடைப்பேச்சு.

ஆ) ஒவ்வொருமனிதனும் தனக்குரிய கலாசாரத்தைப் பேணுவது தலையாய கடமையாகும். இக் கலாசாரத்தை சரியான முறையில் அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டியதும் கட்டாய கடமையாகும். ஆனால் இன்றோ மனிதன் தன் தகாத செயற்பாடுகளால் இக்கலாசாரத்தை சீரழித்து வருகின்றான். இன்று இக்கலாசார சீரழிவுக்கு காரணமாக அவனிடம் இருக்கும் சமய நம்பிக்கையும் இறைபக்தியும் குன்றியமையே காரணம் என குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப் படுகின்றன. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இருவருக்கு இடையில் இடம் பெறும் உரையாடல்.

இ) நிலம், நீர் காற்று, கடல், ஆகாயம், காடு, மலை, விலங்குகள், தாவரங்கள், என்பன இயற்கை சூழலில் அடங்கி உள்ள அமிசங்கள் ஆகும். இவ் இயற்கை சூழலுக்கு எதிராக மனிதன் அபிவிருத்தி என்னும் பெயரில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மனித குலத்தின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடுகிறது. இதனால் இயற்கை மனிதனுக்கு எதிராக சீற்றமடைகிறது. மனிதகுலம் சொல்லொணா துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது - இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு விளக்கக்கட்டுரை

ஈ) மாலதி அருணனின் தங்கை. சிறுவயதில் பெற்றோரை அவர்கள் இழந்து விட்டனர். அருணனே மாலதிக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவளை வளர்த்தான். அவள் படித்துப் பட்டம் பெற்றதும் சிறந்த சமூகத் தொண்டாற்ற வேண்டும் என்பதே அருணனின் விருப்பம். ஆனால் அவனது இலட்சியக் கனவுக்கு தடைகள் பல குறுக்கிட்டன. அருணனின்கனவு நனவானதா? இக்கருவை அடிப்படையாகக் கொண்டு ஒரு கற்பனைச் சிறுகதை (25 புள்ளிகள்)



kalvi.lk

3) கீழேதரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

நலம், கேடு ஆகிய இரண்டு இயல்புகளும் கலக்கப் பெற்றதே சமூகம். நல்ல சமூகம் என்பதில் நலன்கள் அதிகமாக இருக்கின்றன. கெட்ட சமூகம் என்பதில் தீமைகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு தனிமனிதன் வலிமை படைத்த வாழ்வு, வாழ்கின்ற போது அவனுக்கு நோய்கள் அதிகம் உண்டாவதில்லை. ஆனால் அவன் மெலிந்து போகுங்கால் நோய்கள் பல அவன் உடலில் தோன்ற ஆரம்பிக்கின்றன. இக்கோட்பாடு ஒரு சமூகத்துக்கும் பொருந்தும் உறுதிப் பாட்டோடு கூடிய வாழ்வு சமுதாயத்தில் இருக்கின்ற பொழுது நலன்கள் யாவும் அங்கு மிளிர்கின்றன. சமூகவாழ்வு சீர்குலையும்காலக் கேடுகளும் பல அங்கு தோன்ற ஆரம்பிக்கின்றன.

அவரவர் கொள்கைக்கும் மனப்பக்குவத்திற்கும் ஏற்ப மக்கள் சமுதாயத்தோடு இணக்கம் கொள்கின்றனர். தன் சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பவன் தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலேயே எண்ணம் வைத்தவனாய் இருக்கின்றான். அத்தகையவ மக்களுள் கடைத்தரமானவன். அவனை விட மேலானவன் ஒருவன் இருக்கின்றான் உலகில் கேடுகள் இருக்கின்றன என்பதை அறிந்து அதிலிருந்து தப்பித்துக்கொள்ள உலகை அவன் துறந்து விடுகின்றான். அத்தகையவனைத் துறவி என்று அழைப்பது உலக வழக்கு. கேட்டுக்கு அஞ்சி உலகினின்று விலகியவன் ஆகையால் இவன் கடையன் ஆகின்றான். இவனிலும் மிக்கானாக மற்றொருவன் இருக்கின்றான். அவனைச் சமூக சீர்திருத்தக்காரன் என்று சொல்ல வேண்டும். இவன் சமூக சீர்கேடுகளை அறிந்து மற்றவர்களுக்கு இவற்றை எடுத்து விளக்கி கேடுகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நிர்மாணிக்கின்றான். பலரைத் தன்னுடன் இணைத்துச் சமூகச் சீர்திருத்தங்களைச் செய்கின்றான். அவனுடைய எண்ணத்தையும் செயலையும் சிறப்பித்துக் கூற நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

(10 புள்ளிகள்)

4) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

உலகுக் குயிரே எங்கள் உழவுத் தொழில்
ஓங்கும் முறையில் அதை வளர்போம்
நிலவுக்குவியல் போன்ற நெற் பொலிகள்
நீண்ட மலைகளெனக் குவித்திடுவோம்
தந்தை போல் வயலை நாம் காத்திடுவோம்
தாய் போல பயிரை நாம் வளர்த்திடுவோம்
மைந்தர் போற் பயிருக்கு தொண்டு புரிவோம்
வளர்ந்து விளையத் தெய்வம் வணங்கிடுவோம்
வயல்களைத் துண்டு செய்யும் வழக்கெறிவோம்
வளர் செயலைக் குறைக்கும் மார்க்கம் அறிவோம்
அயலவர் உயர்ச்சியில் அகம் மகிழ்வோம்
ஐக்கிய வாழ்வு தனில் நிதம் திகழ்வோம்
இலங்கை முழுவதுக்கும் உணவளிப்போம்
ஏற்றி அயல் நாட்டவர் பசி தணிப்போம்
இலங்கு தங்கக் குவியல் கொண்டு வருவோம்
எங்கள் பழைய நிலை இன்று காண்போம்.

(புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை)

1) நமக்காக வாழ்ந்தால் மட்டும் போதாது பிறருக்காகவும் வாழ வேண்டும் என்ற கருத்தைப் புலப்படுத்தும் பாடலடிகளைக் மூன்றினைக் குறிப்பிடுக.
2) இப்பாடலடியில் இடம் பெறும் உவமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
3) "எங்கள் பழைய நிலையை இன்று காண்போம்" எனக்கவிஞர் குறிப்பிடுவதால் உணர்த்தப்பவது யாது?
4) இப்பாடல் வலியுறுத்தும் பொருளாதார மேம்பாட்டுக்கான கருத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5) 'வயல்களைத் துண்டு செய்யும் வழக்கெறிவோம்' என்ற அடியின் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக.

(2×5 = 10 புள்ளிகள்)

5) உமது பாடசாலையின் புவியியல் மன்ற செயலாளர் என உம்மைக் கருதிக் கொண்டு, உமது பாடசாலை மாணவர்கள் மேற்கொண்ட சுற்றுலா பற்றிய அறிக்கையை உமது பாடசாலை அதிபருக்கு 100 சொற்களில் சமர்ப்பிக்குக.

(15 புள்ளிகள்)

அல்லது

இன்றைய இளைஞர்கள் பலர் போதைவஸ்து என்னும் கொடிய அரக்கனின் கையில் சிக்கி தமது இளமைப் பராயத்தை சீரழித்து வருகின்றனர். இத்தகைய போதைவஸ்துப் பாவனையிலிருந்து விடுபட இளைஞர்களைத் தூண்டும் வகையில் துண்டுப்பிரசுரம் ஒன்று 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page